

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக தகவல் தொழில்நுட்ப அணி களப்பணிகள் ஒருங்கிணைப்பாளர்கள்,சமூக வலைதள பொறுப்பாளர்கள், மகளிர் அணி பொறுப்பாளர்கள் அனைவரும் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றனர்.விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிட நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வளவனூர் ப.அன்பரசு துணை அமைப்பாளர்கள் கே.சாம்பசிவம், ஆர்.கிருஷ்ணராஜ், எஸ்.பாலாஜி , தொகுதி நிர்வாகிகள் மூ.தேவா, குரு ராமலிங்கம், மகாலட்சுமி செந்தில், ரகுபதி, கதிரவன், நாராயணமூர்த்தி, குமரவேல், மூகாம்பிகை நாராயணன், புளிச்சப்பள்ளம் ராதிகா சித்தானந்தன், கோட்டக்குப்பம் ஜாகிர், திருக்கோயிலூர் தொகுதி விக்னேஷ், ஆசைத்தம்பி பரிமளம், திருநாவுக்கரசு, மேகநாதன், நவீன் குமார், விக்னேஷ், அகமது ஷெரிப், சுப ஸ்ரீ, செல்வகுமார், தேவன், மோகன், ராஜேஷ், சசிகலா கபிரியேல், அபுபக்கர், கோமதி பாஸ்கர், சந்திரசேகர், செல்வகுமார், அருண், முத்தமிழ், இராமு, சுப்புலட்சுமி மணிகண்டன், அரவிந்தன், கபிலன், புஷ்ப ராஜ், மனோஜ் குமார், மணிகண்டன், பூவராகவன், சரவணன், யுவராஜ், சரவணகுமார், பழனிவேல், ராஜேஷ் மற்றும் பலர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகத்தான திட்டம்!

# திருவொற்றியூர் அரசுப் பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி!

## 1-வது மண்டலக்குழுத் தலைவர் தி.மு.தனியரசு வழங்கினார்!

சென்னை, ஆக.27-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் நேற்று காலை நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அரசு பள்ளியில் காலை உணவு திட்டத்தை தொடக்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளின் பசியாற்ற 31 ஆயிரம் அரசுப்பள்ளிகளில் பயிலும் 18 லட்சம் மாணவ-மாணவியர்களுக்கு காலை உணவு திட்டம் நேற்று தொடங்கப்பட்டது.

குழந்தைகளின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்பார்கள் "இன்று குழந்தைகளின் சிரிப்பில் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் குழந்தைகளின் பசியாற்றிய இறைவனாக திகழ்கிறார்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி, சென்னை திருவொற்றியூர் 10வது வார்டு சன்னதி தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அரசு நடுநிலைப்பள்ளியில் காலை 8 மணியளவில் 1வது மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவை வழங்கி மற்றும் குழந்தைகளுடன் அமர்ந்து சாப்பிட்டார்.

இதில் பள்ளி தலைமை ஆசிரியர், தாமோதரன், பள்ளி கல்வித்துறை அதிகாரி ராம் குமார், ஆசிரியர் பெருமக்கள், மாநகராட்சி செயற் பொறியாளர் நமச்சிவாயம், இளநிலை பொறியாளர் குணசேகரன், சுகாதார துறை (SI) கார்த்திகா, தி.மு.க.வடகிழக்கு மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், 10வது வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ் செல்வன் 9வது வட்ட அவைத்தலைவர் கண்ணையன், 13வது வட்ட அவைத்தலைவர் மதிவாணன், அமைப்புச் சாரா ஓட்டுனர் அணி மாவட்ட அமைப்பாளர் தேவனேசன், வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் தயாளன், 10வது வட்ட பொருளாளர் வீரப்பன்,பகுதி பிரதிநிதி சுகுமார், பிரசாத், பால் ராஜ் பாக முகவர்கள், 10வது வட்ட அரவிந்த் , எர்ணாவூர் விக்கி, திருவொற்றியூர் கே.மோகன் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகத்தான திட்டம்!

# மணலி அரசுப் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி!

## 2-வது மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம் வழங்கினார்!

சென்னை, ஆக.27-

திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக் குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் தலைமையில் மணலியில் உள்ள அரசுப் பள்ளியில் மாணவ - மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

தமிழகத்தில் முதல்முறையாக திராவிட மாடல் ஆட்சியில் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்த திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இன்று தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி அவர்கள் வழிகாட்டுதலின்படி சென்னை வடகிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின் படி மணலி அரசினர் தொடக்கப்பள்ளியில் மாணவ - மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் இரண்டாவது மண்டலக் குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழகச் செயலாளர்கள் சாலை டீ கணேசன், எம். செல்வம், நிர்வாகிகள் செல்வராஜ், என்.பழனி, கேபிள் கணேசன், நாகலிங்கம், டி.வி. விக்னேஷ், தரணி குலசேகரன், ஆனந்தன், மனோகரன் மற்றும் மணலி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கோமலேஸ்வரி, மண்டல அலுவலர் கோவிந்தராஜன், செயற்பொறியாளர் பிரதீப், உதவி செயற்பொறியாளர் தேவேந்திரன், சீனிவாசன், உதவி பொறியாளர்கள் குமார் மற்றும் கழக உடன்பிறப்புகளும் கழக மூத்த முன்னோடிகளும், இளைஞர் அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணி, மகளிர் அணி ஆகிய அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! தலைமை: எஸ்.பொன்ராஜ்! முன்னிலை - ஜே.ஜே.எபினேசர்!

# சென்னை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் நல உதவிகள்!

## தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி - காசி முத்துமாணிக்கம் வழங்குகின்றனர்!

சென்னை, ஆக. 27

சென்னை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (27.8.2023 - ஞாயிறு) மாலை 5மணிக்கு மணலி சாலை, கொருக்குப்பேட்டையில் நடைபெறுகிறது.

மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.பொன்ராஜ் தலைமை தாங்குகிறார்.

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், கூல்பாயிண்ட் பிரகாஷ், மாஸ்டி.வெங்கடேசன், மு.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், மணிமேகலை ஏழுமலை , 41 அ வட்ட நிர்வாகிகள் ஆர்.எ.எம்.சசிகுமார், கி.தேவன், எஸ்.எல்.சுந்தர், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், ஜி.ராஜேந்திரன், வி.மணிமாறன் ஆர்.பழனி, எஸ்.சுமதி, டி.ஜெஸ்டின், எம்.நடராஜன், எஸ்.பொன்ராஜ், இ.பால சுந்தரம், ஆர்.வி.மாசானதுரை, ஜி.வாசுதேவன், என்.சிவகுமார், வி.வி. தங்கராஜ், எஸ். சுப்பிரமணி, எம்.பிரேம் குமார், ஆர்.வி.கார்த்திக், ஜி.ஹரிராமன், கே.அசோக், என்.டி. சேகர், எஸ்.மணிகண்டன், ஜெ.தினேஷ்குமார், கு.தமிழ் செல்வன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி எம்.பி., காசி முத்துமாணிக்கம் வழங்குகிறார்கள்

பி.டி.பாண்டிசெல்வம், பகுதிச் செயலாளர் இரா. லட்சுமணன், நேதாஜி யு. கணேசன், என்.மருதுகணேஷ், எஸ்.எம்.பரசுராமன், வை.கலைவாணன், ஏ. ரமேஷ்பாபு, வே.லட்சுமி வேலு, எம்.விமலா, இர.பொன்இளவரசன், இ.ரவிக்குமார் , ஏ.டி.மணி, ஆர்.கோவிந்தராஜ், எம். எஸ்.அப்துல்ரஹ்மான், ஏ.கே.பால்சாமி, ரத்தினகுமார், கே.யுவராஜ், எஸ்.ராஜசேகர், டி.தேவேந்திரன், எம்.சுசிலா, டி.சங்கர், பா.வேதாசலம், எஸ்.சொக்கலிங்கம், மீஞ்சூர்முகுந்தன், ஜி.ராஜா, கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, வி. கார்த்திக், எஸ்.நீலமேகன், டி.நவீன்குமார், எஸ்.தமிழ், செல்வன், ஆர்.சூர்யகாந்தா, எஸ்.சூர்யபிரபா, எம். பி.கிளைமெண்ட்ராஜ், பி. ராமேஷ், கே.கமலகண்ணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

### சென்னை வடக்கு மாவட்ட

# மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம்!

## லட்சுமி வேலு - விமலா மோகன் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 27-

சென்னை வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் லட்சுமி வேலு, விமலா மோகன் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை வடக்கு மாவட்ட கழக மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் இன்று (27.8.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் சங்கீதா ஹால் பாம்பே ஹோட்டல் அருகில் மாவட்ட அமைப்பாளர்கள் லஷ்மி வேலு மற்றும் விமலா மோகன் எங்களது தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, மாநில மகளிர் அணி இணை செயலாளர் குமரி விஜயகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் மூர்த்தி, ஜே.ஜே எபினேசர், ஆர்.டி.சேகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி வட்ட நிர்வாகத்தில் உள்ள மகளிரணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



திருவொற்றியூர் இராமநாதபுரம் மற்றும் தியாகி சத்தியமூர்த்தி நகர் மாநகராட்சி நடுநிலை மற்றும் தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை மாநில மீனவர் அணி துணைத் தலைவரும், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் துவங்கி வைத்து மாணவ மாணவிகளுடன்அமர்ந்துஉணவுஉட்கொண்டார்.இதில்கழகநிர்வாகிகள்பலர்கலந்துகொண்டனர்.



புழல் மத்திய சிறையில் சிறைவாசிகளின் எண்ணிக்கையை குறைக்க நடைபெற்ற 'சிறை–அதாலத்' நிகழ்ச்சியில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் எஸ்.வைத்தியநாதன், எஸ்.எம்.சுப்ரமணியம், சிறைத் துறை டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி, மாவட்ட நீதிபதிகள், சிறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

### 202 சிறை கைதிகள் விடுதலை! சிறை கைதிகளை குறைக்கும் வகையில்

# புழல் மத்திய சிறையில் 'சிறை-அதாலத்' நிகழ்ச்சி!

## உயர்நீதிமன்ற நீதியரசர்கள் - சிறை காவல்துறை அதிகாரிகள் பங்கேற்பு!

சென்னை, ஆக.27-

புழல், மத்திய சிறை2ல் சிறையினுள் சிறைவாசிகளின் எண்ணிக்கையினை குறைத்திடும் பொருட்டு சிறைவாசிகளுக்கு சிறை அதாலத் நிகழ்ச்சி சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் / தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணைக்குழு கௌரவ செயல்தலைவர் எஸ்.வைத்தியநாதன் தலைமையிலும், உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.எம். சுப்பிரமணியம் முன்னிலையிலும் நேற்று (26.08.2023) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலர் நசீர் அகமத் பங்கேற்றார். திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் / முதன்மை அமர்வு நீதிபதி திருமதி. எஸ். செல்வ சுந்தரி, காஞ்சிபுரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் / முதன்மை அமர்வு நீதிபதி திருமதி. ஜெ. மாவிஸ் தீபிகா சுந்தரவதனா, சென்னை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் திருமதி. ஆர்.தமிழ் செல்வி மற்றும் நீதிபதி. திருமதி. சுதா மேலும் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நீதித் துறை முதன்மை நடுவர் மற்றும் 20க்கும் மேற்பட்ட நீதிமன்ற நடுவர்கள் கலந்துகொண்டார்கள்.

**202 பேர் விடுதலை!**

சிறை அதாலத் மூலம் பிணையில் செல்ல இயலாமல் சிறையில் இருக்கும் சிறு வழக்குகளில் ஈடுபட்ட சிறைவாசியின் வழக்குகள் பரிசீலிக்கப்பட்டு சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலமாக கருதி 202 கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர் திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி, சென்னை சரக டிஐஜி ஆ.முருகேசன், சிறைக்கண்காணிப்பாளர்கள் திருமதி. நிகிலா நாகேந்திரன், கண்காணிப்பாளர், மத்திய சிறை - 1 மற்றும் இரா. கிருஷ்ணராஜ், கண்காணிப்பாளர், மத்திய சிறை 2 ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் மகத்தான திட்டம்!

# 108 (அ) வட்டம் அரசுப்பள்ளியில் காலை சிற்றுண்டி!

## வி.சுதாகர் - எல்.சுந்தர்ராஜன் வழங்கினர்!

சென்னை, ஆக 27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் மனதிற்கு நிறைவான புரட்சித் திட்டமான காலை உணவு திட்டத்தை தளபதி அவர்கள் தொடங்கி வைத்தார் அதை தொடர்ந்து சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனையின் படி, 108அ வட்டத்தில் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மனதிற்கு நிறைவான புரட்சித் திட்டமான காலை உணவு திட்டத்தை பள்ளி மாணவ செல்வங்களுக்கு எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் 108 அ வட்ட கழக செயலாளர் எல்.சுந்தர் ராஜன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் கே.எஸ். எம்.நாதன், நிர்மலா, தேவி, எஸ்.ரசூல் எம். மலர், மாறன், எஸ்.ஜெகதீசன், சி.டி.சுரேஷ், எம். எஸ்.அப்பேன், த.மகேஸ்வரன், கே.என்.ஆர்.நக்கீரன், கி.அருண், எம்.கிருஷ்ணமூர்த்தி, பெ.சதீஷ்குமார், சுறா என்கின்ற எம். வி.நாகேந்திரன், எஸ்.முனியன். ஏ.சி.தர்மன், ஜி.ரவிவேல், மாஸ்டர் நரேன், கே.மகேஷ், மார்க்கெட் சிம்பு, நவீன், கோல்ட் ரவி மற்றும் மேலும் அனைவரும் கலந்து கொண்டனர்.

